மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 129, திரு.ஏ.தா. பொன்னுவேல், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

129—

வரகூர் தொகுதியில் சின்னாற்றில் இரு பாலங்கள் அமைத்தல்.

***21626*—திரு. ஏ. தா. பொன்னுவேல்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரகூர் தொகுதி, வேப்பூர் ஒன்றியத்தில் பெருமாத்தூருக்கும், பென்னகுணத்திற்கும் இடையில் சின்னாற்றில் இரு பாலங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) மற்றும் (ஆ): எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இப்பணியினை மேற்கொள்ள இயலாது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. ஏ. தா. பொன்னுவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சொன்னதைச் செய்து, சொல்லாததையும் செய்யும் இந்த அரசு 5 1/2 கோடி மக்களுடைய நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான், சாலைகளும், போக்குவரத்து வசதியும் சீர்பெற்று இன்றைக்கு மேன்மையான நிலையிலே இருக்கிறது என்றால் அது மிகையாகாது. இந்தப் பொற்கால ஆட்சியில், ஆட்சியை அலங்கரித்துக் கொண்டிருக்கின்ற அமைச்சர் பெருமக்கள் அனைவரும் துரிதமாக சிறப்பான முறையிலே செய்து வருகின்றார்கள் என்றால் அது மிகையாகாது. குறிப்பாக பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் துணிவாக, துரிதமாக புதுப்புது சாதனைகளைப் படைத்து வருகின்றார்கள். அப்படிப்பட்ட இந்த நேரத்திலே, புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற நம்முடைய புரட்சித் தலைவி ஆட்சியில் அந்தப் பகுதி மக்கள் வாழ்கின்ற பகுதியில் இருக்கின்ற, நகரமாய் இருக்கின்ற லப்பக்குடிகாட்டிற்கு செல்லுகின்ற நேரத்தில் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதைப் பரிசீலனை செய்து அந்த நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்ற அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வினாவிலே கேட்டிருக்கக்கூடிய சாலையிலே இரண்டு பாலங்கள் கட்டப்பட வேண்டும். ஒன்றுக்கு 8 இலட்சம் ரூபாயும், மற்றொன்றுக்கு 10 இலட்சம் ரூபாயும் தேவைப்படும் என்று மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. இது ஊராட்சி ஒன்றியச் சாலையாக இருக்கின்ற காரணத்தினாலே நெடுஞ்சாலை நிதியின் அடிப்படையிலே இந்தச் சாலையினுடையப் பணியை இப்பொழுது செய்ய இயலாது. ஆகவேதான் இந்தத் தொகையை ஊராட்சி ஒன்றியங்களிலிருந்தும் எடுத்துச் செய்ய வழியில்லாத சூழ்நிலையில் எந்த அடிப்படையில் இப்படிப்பட்ட திட்டங்களை எடுக்கலாம் என்று வருகின்றபோது, பகுதி 2 திட்டத்திலே, சில இடங்களில் எடுக்கிறோம். இந்த ஆண்டு பகுதி 2 திட்டங்களில் எல்லாம் சில முன்னுரிமை கொடுக்கப்பட்ட மிக முக்கியமானப் பாலங்களைக் கட்டுவதற்காக முடிவு செய்திருக்கிறார்கள். வருகின்ற ஆண்டிலே இது சம்பந்தமாக அரசு பரிசீலிக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.ஏ. தா. பொன்னுவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொகுதிக்கு ஒரு பாலம் என்ற நிலையிலே வழங்கியிருக்கிறார்கள். நீண்டநாளாக தேர்தலிலே வாக்குறுதி கொடுத்து, பொற்கால ஆட்சியை, இன்றைக்கு புனிதத்தலைவி நடத்துகின்ற இந்தப் பொற்கால ஆட்சியில், அந்தத் தேர்தல் நேரத்திலே வாக்குறுதி கொடுத்ததற்காக நம்முடைய அமைச்சர் அவர்கள் தொகுதிக்கு ஒரு பாலம் கொடுத்தார்கள். அந்தப் பாலத்திற்கு இன்றைக்கு ஒப்பந்தப்புள்ளி, டெண்டர் விடப்பட்டு, அந்த மக்களுடைய நம்பிக்கை வீணாகாமல் போற்றுகின்ற வகையிலே செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒரு பாலமாவது அந்தப் பகுதியிலே கட்டிக் கொடுக்க வேண்டும். மழைக்காலங்களிலே பள்ளி மாணவர்களும், பொது மக்களும் அங்கு செல்ல முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே, அதை மறுபரிசீலனை செய்து, இந்த ஆண்டிலேயே ஒரு பாலமாவது, அதாவது 10 இலட்சம் மதிப்பீட்டில் உள்ள அந்தப் பாலத்தைக் கட்டினால் மிக எளிமையாக, அந்த மக்கள், அந்தப் பகுதிக்குச் செல்ல முடியும் என்பதைக் கூறி, அதை மீண்டும் மறுபரிசீலனை செய்து, இந்த ஆண்டிலேயே ஒரு பாலத்தைக் கட்டித்தர முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொகுதிக்கு ஒரு பாலம் என்கின்ற திட்டத்தை நம்முடைய ஒப்பற்ற புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே நாம் உருவாக்கியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு வெள்ள நிவாரணப் பணியின் அடிப்படையில் பல வேலைகளை எடுத்துச் செய்யவேண்டிய சூழ்நிலையில் இந்த அரசு

இருக்கிறது. சாலைகள், பாலங்கள், நீர்நிலைகள், கால்வாய்கள், வரத்துக் கால்வாய்கள், போன்றவை எல்லாம் வெகுவாக பாதிக்கப்பட்டு 400 கோடிக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டு அவைகளை எல்லாம் சீரமைக்க வேண்டிய ஒரு மிகப்பெரிய இக்கட்டான சூழ்நிலை அரசுக்கு இருக்கிறது. அந்த வேலைகளையும் நாம் முடித்தாகவேண்டும். அதற்கான நிதியாதாரத்தையும் நாம் தேட வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். அதுபோல் புதிய திட்டங்களை, இப்படிப்பட்ட திட்டங்களை எடுப்பதற்கும் பல்வேறு சங்கடங்கள் இருக்கின்றன. ஆக இருக்கின்ற நிதியாதாரத்தைப் பொறுத்துதான் முன்னுரிமை கொடுக்கப்படவேண்டிய திட்டங்களை முதலில் செய்துவிட்டு அதற்குப் பின்னால் இவை வருகின்ற சூழ்நிலையில்தான் இப்படிப்பட்ட திட்டங்கள் எல்லாம் கொஞ்சம் தடைப்படுகின்றன. இருந்தாலும் அந்தப் பகுதியினுடைய முக்கியத்துவத்தைக் கருதி இதுசம்பந்தமாக அதிகாரிகளிடத்தில் இருந்து விரிவான அறிக்கையைப் பெற்று வெள்ள நிவாரணப் பணிகளின் கீழே ஏதாவது ஒரு பாலத்தையாவது கட்டலாமா என்பதை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 130, திரு. எம். கே. பாலன், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

130—

கிண்டி தொழிற்பேட்டை குடியிருப்புகளைக் குடியிருப்போருக்கே சொந்தமாக்குதல்

***19855**—திரு. எம். கே. பாலன்:*

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கிண்டி தொழிற்பேட்டைக் குடியிருப்புகளை குடியிருப்போருக்கே சொந்தமாக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தொழிலாளர் மலிவு விலை வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட, வாடகை வீடுகள் முதலில் ஒதுக்கீடு செய்யப்பட்டு,